காஞ்சிபுரம் மாவட்டம்

K **முதல் இடைப் பருவ பொதுத் தேர்வு - ஜூலை 2019**

**பதினொன்றாம் வகுப்பு** பதிவு எண் | | | | | | |

நேரம்: 1.30 மணி **கணக்குப்பதிவியல்** மதிப்பெண்கள்: 50

பகுதி - அ

**I.** சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக: **15×1=15**

1) நிதிநிலைக் கணக்கின் அடிப்படையாக விளங்குவது
அ) சமூகக் கணக்கியல் ஆ) காரியதரிசிகளின் கணக்கியல்
இ) மேலாண்மைக் கணக்கியல் ஈ) பொறுப்பு கணக்கியல்

2) நிதித்தகவல்களின் அகப்பயனாளராகக் கருதப்படுபவர் யார்?
அ) கடனீந்தோர் ஆ) பணியாளர் இ) வாடிக்கையாளர் ஈ) அரசு

3) இரட்டைப்பதிவு முறையை வணிக உலகிற்கு அறிமுகப்படுத்தியவர்
அ) ஆடம்ஸ்மித் ஆ) லூக்காஸ் பேசியோலி இ) J.R. பேட்லிபாய்

4) வணிகம், நீண்ட காலம் தொடர்ச்சியாக நடைபெறும் என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டது
அ) வணிக தனித்தன்மை கருத்து ஆ) நிறுவன தொடர்ச்சி கருத்து
இ) கணக்கியல் கால அனுமானம் ஈ) முன்னெச்சரிக்கை கொள்கை

5) இறுதி சரக்கிருப்பு அடக்கவிலை அல்லது விற்று ஈட்டக்கூடிய மதிப்பு இதில் எது குறைவோ அதனடிப்படையில் மதிப்பிடப்படும் என்ற கணக்கியல் சமன்பாடு?
அ) முக்கியத்துவ மரபு ஆ) பண மதிப்பீட்டுக் கருத்து
இ) முன்னெச்சரிக்கை மரபு ஈ) நிகழ்வு தீர்வு / கருத்து

6) இந்தியாவில், கணக்கியல் தரநிலைகளை வழங்கும் அமைப்பு
அ) இந்திய மைய வங்கி
ஆ) இந்திய அடக்கவிலை மற்றும் கணக்காளர் நிறுவனம்
இ) உச்சநீதிமன்றம்
ஈ) இந்தியப் பட்டயக் கணக்காளர் நிறுவனம்

7) ஒரு நிறுவனத்தின் சொத்துக்கள் மதிப்பு ரூ. 1,00,000 பொறுப்புகள் ரூ. 20,000 எனில் அந்நிறுவனத்தில் முதல்
அ) ரூ. 80,000 ஆ) ரூ. 1,20,000 இ) ரூ. 1,00,000 ஈ) ரூ. 20,000

8) முன்கூட்டிச் செலுத்திய வாடகை ஒரு
அ) பெயரளவு கணக்கு ஆ) ஆள்சார் கணக்கு
இ) சொத்துக் கணக்கு ஈ) பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு

9) உரிமையாளரால் வணிகத்திலிருந்து எடுக்கப்படும் தொகை வரவு வைக்கப்படும் கணக்கு
அ) எடுப்புகள் கணக்கு ஆ) ரொக்கக் கணக்கு
இ) முதல் கணக்கு ஈ) கொள்முதல் கணக்கு

10) பற்று மற்றும் வரவு இனங்களை குறிப்பேட்டிலிருந்து பேரேட்டுக் கணக்குகளில் எடுத்து எழுதும் நடைமுறையை இவ்வாறு அழைக்கலாம்.
அ) கூட்டுதல் ஆ) எடுத்தெழுதுதல்
இ) குறிப்பேட்டில் பதிதல் ஈ) இருப்புக்கட்டுதல்

Scanned by CamScanner

11) ஒரு கணக்கின் வரவு மொத்தத்தைவிட பற்று மொத்தம் அதிகமாக இருப்பின் அதன் பொருள்

அ) வரவு இருப்பு ஆ) பற்று இருப்பு
இ) இருப்பு இன்மை ஈ) பற்று மற்றும் வரவு இருப்பு

12) பேரேட்டுக் கணக்குகள் தயாரிப்பதன் முக்கிய நோக்கம்

அ) நிதிநிலைமையை அறிய ஆ) இலாபம் அல்லது நட்டத்தை அறிய
இ) நிதிநிலைமை மற்றும் இலாப நட்டத்தை அறிய
ஈ) ஒவ்வொரு பேரேட்டுக் கணக்கின் இருப்பை அறிய

13) பின்வருவனவற்றில் எது கணக்கியலின் பதிவுகளில் இடம் பெறாது?

அ) நிதிநிலைக் கணக்கியல் ஆ) மேலாண்மைக் கணக்கியல்
இ) மனிதவளக் கணக்கியல் ஈ) மேற்கண்ட ஏதுமில்லை

14) வணிகத்தின் உரிமையாளர் இட்ட முதலிற்கு வணிக நிறுவனம் கடன்பட்டிருக்கிறது என்பதை கூறும் கருத்து

அ) பணமதிப்பீட்டு கருத்து ஆ) அடக்கவிலை கருத்து
இ) வணிகத் தனித்தன்மை கருத்து ஈ) இரட்டைத் தன்மை கருத்து

15) கணக்கியல் சமன்பாட்டின்படி சரியாக இல்லாதது

அ) சொத்துக்கள் = பொறுப்புகள் + முதல்
ஆ) சொத்துக்கள் = முதல் + பொறுப்புகள்
இ) பொறுப்புகள் = சொத்துக்கள் + முதல்
ஈ) முதல் = சொத்துக்கள் – பொறுப்புகள்

## பகுதி - ஆ

**II.** எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளி: **4×2=8**
**(வினா எண்: 21 கட்டாய வினா)**

16) கணக்கியலை வரையறு.

17) கணக்கியல் கருத்துக்கள் என்றால் என்ன?

18) கணக்கியல் சமன்பாட்டினை நிரப்புக:

| | சொத்துகள் | = | முதல் | + | பொறுப்புகள் |
|---|---|---|---|---|---|
| அ) | 50,000 | = | 40,000 | + | ..................... |
| ஆ) | ............... | = | 80,000 | + | 20,000 |

19) பின்வரும் நடவடிக்கைகளுக்கு குறிப்பேடு பதிவு செய்க.

அ) முருகன் ரூ. 80,000 ரொக்கத்துடன் தொழில் தொடங்கினார்.
ஆ) சொந்தப் பயன்பாட்டிற்கான பணம் எடுத்தது ரூ. 5,000.

20) முதன்மை ஏடு என்றால் என்ன?

21) பற்று இருப்பு என்றால் என்ன?

## பகுதி - இ

**III.** எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளி: **4×3=12**
**(வினா எண்: 27 கட்டாய வினா)**

22) கணக்கியலின் பிரிவுகள் யாவை?

23) கணக்கியலின் பொன்னான விதிகள் யாவை?

Scanned by CamScanner

24) குறிப்பேட்டில் கீழ்க்கண்ட தொடக்கப் பதிவினைப் பதிவு செய்க.

| | | | |
|---|---|---|---|
| ரொக்கம் | ரூ. 40,000 | கடனாளிகள் | ரூ. 30,000 |
| கடனீந்தோர் | ரூ. 25,000 | கணிப்பொறி | ரூ. 10,000 |
| அறைகலன் | ரூ. 15,000 | | |

25) திரு. சங்கர் அவர்களின் குறிப்பேட்டில் பதிவு செய்க.

2010

| | | | |
|---|---|---|---|
| அக். | 5 | ரொக்கத்திற்கு கொள்முதல் செய்தது | ரூ. 12,000 |
| | 7 | மயில்சாமியிடம் கொள்முதல் செய்தது | ரூ. 8,000 |
| | 8 | ரொக்க விற்பனை செய்தது | ரூ. 42,000 |
| | 10 | ரேவதிக்கு கடனாக சரக்கு விற்றது | ரூ. 10,000 |

26) பின்வரும் நடவடிக்கைகளிலிருந்து விற்பனை கணக்கு தயாரிக்கவும்.

2016

| | | | |
|---|---|---|---|
| ஜனவரி | 1 | சாம் என்பவருக்கு கடனுக்கு விற்றது | ரூ. 2,000 |
| | 4 | சுரேஷ் என்பவருக்கு ரொக்கத்திற்கு விற்றது | ரூ. 1,250 |
| | 11 | ஜாய் என்பவருக்கு கடனுக்கு விற்றது | ரூ. 4,000 |
| | 17 | ராஜன் என்பவருக்கு ரொக்கத்திற்கு விற்றது | ரூ. 1,500 |

27) கணக்கு என்றால் என்ன? கணக்குகளை வகைப்படுத்தி தகுந்த உதாரணங்களுடன் கூறுக.

## பகுதி - ஈ

**IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளி: 3×5=15**

28) அ) கீழ்க்கண்ட நடவடிக்கைகளை குமார் அவர்களின் குறிப்பேடுகளில் பதிவு செய்க.

2017

| | | | |
|---|---|---|---|
| மார்ச் | 1 | குமார் வியாபாரம் தொடங்க கொண்டு வந்த ரொக்கம் | ரூ. 30,000 |
| | 2 | ரொக்கத்திற்கு அறைகலன் வாங்கியது | ரூ. 10,000 |
| | 10 | கமலேசிற்கு செலுத்திய ரொக்கம் | ரூ. 6,000 |
| | 12 | ஹரியிடமிருந்து பெற்ற ரொக்கம் | ரூ. 4,000 |
| | 20 | மின்னனு பரிவர்த்தனை மூலம் சம்பளம் வழங்கியது | ரூ. 2,000 |

**(அல்லது)**

ஆ) பின்வரும் நடவடிக்கைகளைக் கொண்டு கணக்கியல் சமன்பாட்டினை உருவாக்கவும்.

i) அஜய் ரூ. 1,40,000 ரொக்கம் மற்றும் ரூ. 60,000 மதிப்புள்ள சரக்குடன் வியாபாரத்தை தொடங்கினார்.

ii) ரூ. 20,000 மதிப்புள்ள அறைகலன்களை ரொக்கத்திற்கு வாங்கினார்.

iii) வங்கியில் செலுத்தியது ரூ. 40,000.

iv) ரூ. 10,000 மதிப்புள்ள சரக்குகள் ரூ. 15,000க்கு இரவியிடம் விற்கப்பட்டது.

v) இணைய வங்கி மூலமாக மின்கட்டணம் ரூ. 500 செலுத்தப்பட்டது.

29) அ) கீழ்க்கண்ட குறிப்பேட்டுப் பதிவுகளுக்குரிய நடவடிக்கைகளை தருக.

அ) ரொக்க க/கு ப
முதல் க/கு
(.......................)

ஆ) வங்கி க/கு ப
விற்பனை க/கு
(.......................)

இ) எடுப்பு க/கு ப
வங்கி க/கு
(.......................)

ஈ) முருகன் க/கு ப
விற்பனை க/கு
(.......................)

உ) கொள்முதல் க/கு ப
ரொக்க க/கு
(.......................)

Scanned by CamScanner

(அல்லது)

ஆ) கணக்கியல் சமன்பாட்டின் அடிப்படையில் கீழ்க்கண்ட விடுபட்ட விவரங்களையும், தொகையினையும் எழுதுக.

| வ.எண் | நடவடிக்கைகள் | சொத்துகள் (ரொக்கம்+சரக்கு+அறைகலன்) | | | = | பொறுப்புகள் + முதல் | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | ............... | 60,000 + | 0 + | 0 | = | 0 + | 60,000 |
| 2. | அறைகலன் வாங்கியது | + | 0 + | – | = | 0 + | 0 |
| | | 50,000 + | 0 | +10,000 | = | 0 + | 60,000 |
| 3. | குமாரிடம் கடனாக சரக்கு கொள்முதல் செய்தது | | | | | | |
| | | 50,000 | +15,000 | +10,000 | = | 15,000 + | 60,000 |
| 4. | ............... | (–2,000) + | 0 + | 0 | = | 0 + | (–2,000) |
| | | 48,000 | +15,000 | +10,000 | = | 15,000 + | 58,000 |

30) அ) கீழ்க்கண்ட நடவடிக்கைகளைக் குறிப்பேட்டில் பதிந்து பேரேட்டில் எடுத்தெழுதுக.

| 2019 | | | ரூ. |
|---|---|---|---|
| ஜனவரி | 1 | ரொக்க இருப்பு | 50,000 |
| | 5 | ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது | 30,000 |
| | 7 | காப்பீடு செலுத்தியது | 2,500 |
| | 10 | ரொக்கத்திற்கு இயந்திரம் வாங்கியது | 9,000 |
| | 15 | வட்டி பெற்றது | 2,000 |
| | 18 | ரொக்கத்திற்கு சரக்கு விற்றது | 7,000 |

(அல்லது)

ஆ) பின்வரும் நடவடிக்கைகளை நேரடியாகப் பேரேட்டில் எடுத்து எழுதவும்.

| 2018 | | | ரூ. |
|---|---|---|---|
| ஜுன் | 1 | ராஜா ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது | 50,000 |
| | 6 | ரொக்கத்திற்கு சரக்கு விற்றது | 8,000 |
| | 8 | தேவி என்பவருக்கு கடனுக்கு சரக்கு விற்றது | 9,000 |
| | 15 | ரொக்கம் கொடுத்து சரக்கு வாங்கியது | 4,000 |
| | 20 | சாந்தி என்பவரிடம் கடனாக சரக்கு வாங்கியது | 5,000 |

---------

Scanned by CamScanner